# ஐந்திணையில் இனக்குழு வாழ்வியல்

**அ.பிரபா & முனைவர்நா.ஐயப்பன்,**

**தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில்,**

**ஆய்வுச் சுருக்கம்**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்நில மக்களும் பண்ட மாற்று முறையின் மூலம் பிற நிலத்தாரின் உணவுப் பண்டங்களை உண்ணும் வழக்கம் உருவாகியது . சங்க கால சமுதாய அமைப்பில் உணவு உற்பத்தியில் ஏற்படும் மாற்றம் சமுதாய முறையை மாற்றி அமைக்ககின்றது . தமிழனின் நாகரீகப் பண்பாட்டு வளர்ச்சி குறிஞ்சியில் தொடங்கி நெய்தலுக்கு நேராக நகர்ந்திருக்கின்றன என்பதனை சங்க இலக்கிய நூல்களின் வாயிலாக அறியலாம். இயற்கையை தெய்வமாக வழிபட்டனர் . இயற்கையை மந்திரத்தின் மூலம் கட்டுபடுத்தும் ஆற்றல் மிக்கவர்களாகவும் இருந்திருக்கின்றனர். விலங்குகளைப் பழக்கி தன்னுடைய தேவைக்காக பயன்படுத்திக் கொண்டனர் . காலநிலைகளின் மாற்றங்களை அறிந்து அதற்கேற்றார் போல் பயிரிட்டனர் . சங்ககால மக்கள் நிலங்களின் தன்மைகேற்றார் போல வாழும் முறைகளை அறிந்திருந்தனர் . ஆகவே ஐந்திணை மக்களின் இனக்குழு வாழ்வியல் முறைகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையாகும்.

## முன்னுரை

சங்ககாலம் தமிழகத்தில் ஒரு மாறுதல் நிலையை உருவாக்கிய காலமாகும். அது இனக்குழு வாழ்க்கையை அழித்து நிலவுடைமையாக மலரும் காலக் கட்டத்தைக் குறிக்கின்றது சங்ககாலத்தில் , இனக்குழு வாழ்க்கை தான் தமிழகத்தில் நிலவி இருந்தன . இக்காரணத்தினாலேயே சங்க இலக்கியங்களில் இனக்குழு வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் பல நிகழ்வுகளையும் , எச்சங்களையும் காணமுடிகின்றது. உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்ட மானிடவியலார் சமத்துவச்சமுதாயம் , தரநிலைச் சமுதாயம் , சாதிசமுதாயம் என மூன்று வகைகளைக் குறிப்பிடுகின்றது . சமத்துவச் சமுதாயம் இனக்குழு அமைப்பு , பழங்குடி அமைப்பு என்னும் இரு படிநிலைகளைக் கொண்டது தமிழனின் நாகரீகப் பண்பாட்டு வளர்ச்சி குறிஞ்சியில் தொடங்கி நெய்தல் வரை நேராக நகர்ந்தது என்று இலக்கிய நூல்களின் வழி அறியலாம் . சங்ககால சமுதாய அமைப்பு உணவு உற்பத்தியை மையமாக வைத்துதான் சமூகச் செயல்பாடுகளும் அமைந்துள்ளன.

## இயற்கையை போற்றுதல்

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர் . இயற்கையை வணங்கினர் தம்மை சுற்றி நடக்கும் நிகழ்வுகள் அனைத்திற்கும் இயற்கை தான் காரணம் என நம்பிக்கைகொண்டனர்

எனவே இயற்கை என்ற சொல் பழந்தமிழில் 'இயல்பு'என்ற பொருளில் வழங்கியது "இயற்கையின் வாயிலாக ஆதி மனிதன் இறைவனைக் கண்டான் இயற்கை இறைவனின் கலை என்பார். சர் தாமஸ் பிரௌன் நாள் தோறும் மனிதன் ஆற்ற வேண்டிய கடமைகளைக் கற்பிக்கும் நூலாக இறைவனின் நூலாக அமைகின்றது இயற்கை"என்றுகூறுகின்றார்.

அணுக்களால் செறிந்த நிலம் , நிலத்தின் கண் ஓங்கியிருக்கும் வானம், வானளவு பொருந்தித் தடவி நிற்கும் காற்று , காற்றினால் பெருகும் தீ, தீயுடன் மாறுபட்ட நீர் என்று ஐந்து வகையான பெரிய ஆற்றல்களை உடையது இயற்கை, இதனை

**"மண் திணிந்த நிலனும்,**
**நிலன் ஏந்திய விசும்பும்,**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும், என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல"** **(புற: 2: 1-6)**

என்பதனை புறநானூற்றின் பாடல்வரிகளின் மூலமாகவும், பரிபாடல் 2-வது பாடலிலும் இயற்கையின் சிறப்புகளை எடுத்துரைப்பதனை அறியலாம்.

**இனக்குழு சமுதாயம்**

இனக்குழு சமுதாயத்தில் சடங்கே வாழ்க்கையாகவும் , வாழ்க்கையே சடங்காகவும் அமைந்தன. இனக்குழு மக்கள் எழுத்தறியா மக்கள் ஆதலால் அவர்களுடைய மந்திரப் பாடல்கள் வாய்மொழியாலானவை அவை ஒத்திசைவு உள்ளவை . அவர்களுடைய பாடல் உடலசைவுகளுடன் வெளிப்பட்டன . இனக்குழுவில் கூட்டு வாழ்க்கை நிலவிய வரையில் பொருள் உற்பத்திக்கு மந்திரச் சடங்குகள் ஊக்கமளித்தன . மந்திரச் சடங்குகள் பல செயல்களின் தொகுதியாக அமைந்தன சடங்குகளின் போது மது அருந்தினர் தெய்வங்களுக்கு உணவுவகைகளைப் படைத்தனர் . பலியிட்டனர், பூ, வாசனைத் திரவியம் ஆகியவற்றைப் படைத்தனர்.

மழை, வளம் ஆகியவற்றை வேண்டிச் சடங்குகள் செய்யப்பட்டன. வேட்டை, விவசாயம் ஆகிய இரண்டிற்கும் மழை மிகவும் அவசியமாகும் பரிபாடலில் வையை ஆற்றில் நீராடி வையை ஆற்றினை வழிபட்டு வாழ்த்தும் பழக்கம் சங்ககால மக்களிடையே இருந்திருக்கின்றன. மக்கள் பொன்னால் செய்த நண்டு , நத்தை, இறால்மீன், வாளைமீன் போன்றப் பொருள்களை வையை ஆற்றின் புது நீரில் காணிக்கைப் பொருளாக இட்டு நாட்டில் விளைச்சல் பெருகிட உலகில் மழை பொழிய வேண்டும் என்று வேண்டினர்,

**“நத்தொடு, நள்ளி, நடை இறவு வயவாளை**

**வித்தி அலையில், விளைக! போலிக! என்பார்.**
**இல்லது நோக்கி இனிவரவு கூறாமுன்,**
**நல்லது வெஃகி விளை செய்வார்"** **(பரி. 10: 85-88)**

இதனை பரிபாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## குறிஞ்சி நில இனக்குழு அமைவு

மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும் . அப்பகுதியில் வாழ்ந்த மக்களை குறவர் என்றனர் . கிழங்கு அகழ்தல் , தினை, மலைநெல் பயிரிடல் இயற்கையாகக் கிடைக்கும் மூங்கிலரிசி காய்கனிகளை சேகரித்தல் , வேட்டையாடுதல் ஆகியவற்றின் மூலம் தங்களது உணவுத் தேவைகளை நிறைவு செய்தனர் . உணவினை சேகரித்து தாம் மட்டும் உண்ணாமல் பிறருக்கும் கொடுத்து உண்ணும் வழக்கம் இருந்தது.

**"நிலம் புதைப் பழுனிய மட்டின் தேறல்,**
**புல் வேய்க் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து**
**நறு நெய்க் கடலை விசைப்ப, சோறு அட்டு"**

**(புற:120, 12-14)**

என்பதன் மூலம் குழுக்களாக சேர்ந்து உழைத்தனர் என்பதனை அறியலாம்.

## குறிஞ்சி நில மக்களின் உணவு முறைகள்

தேன், கிழங்கு, மா, பலா, தினைமாவு போன்ற இயற்கையான உணவுகள் சமைக்கப்படாமல் உண்ணக் கூடியவையாக இருந்துள்ளன . உணவுகள் கெட்டு போகாமல் பாதுகாத்து பதப்படுத்தி உண்ணும் முறையினையும் அறிந்துள்ளனர். குரங்குகள் உண்ட பிளவுபட்ட பெரிய பலாப்பழத்தை எடுத்துக் கொண்டுவந்து அதனை பலநாட்கள் வைத்து உண்டனர்.என்பதனை,

**“கலை உணக் கிழிந்த, முழவு மருள் பெரும்பழம்**

**சிலை கெழு குறவர்க்கு அல்கு மதிசைவு ஆகும்”**

**(புற: 236: 1-2)**

என்ற புறநானூற்றின் வழி தெளிவாகின்றது.

**வாழ்க்கை முறை**

குறிஞ்சி நிலமக்கள் பிறநிலம் சார்ந்த மக்களுக்கு பாகுபாடின்றி ஆட்டிறைச்சியுடன்நெய் கலந்து வெண்மையான சோற்றில் வெள்ளெலியின் சூட்டிறைச்சியைச் சேர்த்து உண்ணக்கொடுப்பதனை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

**“மை ஊன் தெரிந்த நெய் வெண் புழுக்கல்**

**எலிவான் சூட்டொடு, மலியப் பேணுதும்” (நற். 83: 5-6)**

இதிலிருந்து ஒரு நிலத்தார் பிறநிலத்தவருக்கு கொடுத்து உண்ணும் முறை இருந்துள்ளதை அறியலாம்.

**முல்லை நில இனக்குழு அமைவு**

முல்லைத் திணையின் உற்பத்தி முறை கால்நடை வளர்ப்பு சார்ந்ததாக அமைந்துள்ளது . மாடுகள், ஆடுகள் மந்தையாக மேய்க்கப்பட்டன. இவர்கள் கல்பையைக் கால்நடைகளின் கழுத்தில் பிணைத்து உழுது பயிரிடும் முறை முல்லை நிலத்தில் தான் தோன்றியது. மனித இனத்தின் நாகரீக வளர்ச்சியின் இரண்டாவது நிலை இங்குதான் தோன்றிது முதன் முதலாகத் தனிநபர் சொத்துரிமை இங்குதான் ஏற்பட்டது.

இனக்குழுக்களாக இருந்தவர்கள் பின்னர் தனித்தனிக் குடும்பமுறைகளை உருவாக்கினார்கள்.

நம்பிக்கை

உறவினர்களின் வருகையினை காக்கை , பல்லி முதலிய உயிரினங்கள் ஒலி எழுப்பும் ஓசையை கொண்டு அறிவார்கள் என்பதனை நற்றினையில்

**“புள் அறிவுநீ இயினகொல்லோ தௌ;ளிதின்”** **(நற்: 161:9)**

**“படுங்கொல் வாழி நெடுஞ் சுவர்ப் பல்லி”** **(நற்: 169:3)**

எனும் வரிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**முல்லை நில வாழ்க்கை முறை**

முல்லை நிலத்தில் வேட்டுவன் தன் சுற்றத்தாருக்காக இரவு முழுவதும் வேட்டைத்தொழிலில் ஈடுபட்டு வந்தான் . வேட்டையாடிய களைப்பு தீர இனிமையான கள்ளினை உண்டு மயங்கி இருப்பான் என்பதனை நற்றினை பாடல்வரிகளின் மூலம் தெளிவாகின்றன.

**“இருமடைக் கள்ளின் இன்களி செருக்கு**

**வன் புலக் காட்டு நாட்டதுவே - அன்பு கலந்து. (நற் 59:5-6)**

**உழவுமுறை**

குறிஞ்சி நிலமக்களைப் போல முல்லை நிலத்தவரும் பலமுறை உழுது பண்பட்ட பழங்கொல்லைகளில் வரகினை விதைத்தனர் இதனை,

**“விதையர் கொன்ற முதையில் பூழி**

**இடுமுறை நிரம்பிய ஈர் இலை வரகின்”. (நற். 121:1-2)**

எனும் நற்றினை பாடல்களின் மூலம் முல்லை நிலத்திலுள்ள மலர்களை பிற நிலமக்களிடையே விற்பனை செய்துள்ளனர் . என்பதிலிருந்து இனக்குழுக்குழுக்கிடையே பண்டமாற்று முறை இருந்துள்ளமை அறியலாகும்.

**மருத நில இனக்குழு அமைவு**

மருதநில வேளாண்மையின் தொடக்க காலம் என்பது குறிஞ்சி , முல்லை நிலங்களில் அமைந்தது போன்ற இனக்குழு உற்பத்தி முறையாகவே அமைந்திருக்க வேண்டும் வன்நிலத்தில் வேளாண்மை பொய்க்கும் போது மென்நிலத்தார் உணவளித்தனர் . நெல், கரும்பு ஆகிய பயிர்களின் உணவு உற்பத்தியின் மையமாக மருதநிலம் சிறப்பு பெறுவதற்கு காரணம் ஏரினால் உழும் உழவர்களும் அவர்களுக்கு உழுதல் தொழில் புரிவதற்கு உறுதுணையாக இருந்த எருதுகளையும் கூறலாம் இதனையே,

**“வலம்பட நடக்கும் வலிபுணர் எருத்தின்**

**உரன்கெடு நோன்பகட்டு உழவர் தங்கை”** **(சிறு. 189-190)**

சிறுபாணாற்று வரிகள் பதிவு செய்கின்றன.

**உணவு முறைகள்**

மருத திணையில் உழவர்கள் அதிகாலையில் உழவுத்தொழிலை மேற்கொள்ள வயலுக்கு செல்வார்கள் விடியற்காலையில் செல்லும்போது வரால்மீனின் பெரியதுண்டங்களை மிளிறும் வண்ணம் குழம்பிலே பிறழவிட்டு உணவிற்குரிய அரிசியாற் சமைத்த சோற்றுத்திறளை விரும்பி உண்டு உழவன் உழவுத்தொழிலுக்கு சென்றான் இதனை,

**"கண்படை பெறாஅது தண்புலர் விடியல்**
**கருங் கண் வராஅல் பெருந் தடி மிளிர்வையொடு**
**புகர்வை அரிசிப் பொம்மற் பெருஞ்சோறு" (நற். 60: 3-5)**

என்பதனை நற்றிணைப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பண்டமாற்று முறை**

மருதநிலமானது தொடர்ச்சியான விளைச்சலைத் தரும் நிலமாகும்

**"முள் எயிற்றுப் பாண்மகன் இன் கெடிறு சொரிந்த**
**அகன் பெரு வட்டி நிறைய மனையோள்**
**அரிகாற் பெரும் பயறு நிரைக்கும் ஊர!" (ஐங்: 47: 1-3)**

இங்கு 'வட்டி'என்பது கூடையைக் குறிக்கும் . மருநிலமானது மீன்கள் நிறைந்த நீர்நிலைகளை உடையது நெல்லுக்கு உப்பு கொடுப்பது போல ஒரு வட்டி மீனுக்கு ஓரு வட்டி பயறு என்ற அளவில் பண்டங்கள் மாற்றிக் கொள்ளப்பட்டமையின் மூலம் பண்டமாற்ற முறைகளைப் பற்றி அறிந்துக்கொள்ள முடிகின்றன . மருதநிலமானது தொடர்ச்சியான விளைச்சலினைத் தரும் நிலப்பகுதியாக இருந்திருக்கின்றன. என்றுதெளிவாகின்றது.

**மருதநில மறுமலர்ச்சி**

மருதநில வாழ்க்கை மற்ற நில வாழ்க்கை விட செழிப்புமிக்கதாகயிருந்தது. இங்கு குழுவாழ்க்கை அழிந்தது மருதநிலத்தில் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி பெருகியதால் இங்கு இனக்குழு தலைவர்களாக கிழார்களும் மன்னர்களும் இருந்தனர் . இவ்வினக்குழுத் தலைவர்களின் வளர்ச்சி நீர் வளமிக்க நிலப்பரப்புகள் மீது அதிகாரம் கொண்டவர்களாக மாற்றியது . கால்நடை மற்றும் கலப்பையின் பயன்பாடு மருதநில உற்பத்தி முறையை உயர்ந்த மதிப்புடையதாக மாற்றியது.

**நெய்தல் நில இனக்குழு அமைவு**

நெய்தல் நிலத்தவரை பரதவர் , வலையர், மீனவர், நுழையர், உமணர் என்று அழைக்கப்படுகின்றனர் . நெய்தல் நிலத்தில் வாழும் மக்களுக்குரிய சிறப்பு வேறு எந்த திணையிலும் இருப்பதில்லை நெய்தல் நிலத்தில் உப்பு உற்பத்தியாகின்றது உப்பானது அனைத்து நில மக்களுக்கும் தேவையான ஒன்றாகின்றது.

**நெய்தல் நில உணவு**

நெய்தல் நிலத்தில் மீன்வகைகள் , இறைச்சி, ஆமை போன்றவற்றை இன்றியமையாத உணவாக இருக்கின்றன . மீன் கருவாடு, உப்பு, நெய் ஆகியவை நெய்தல் நிலத்தின் முதன்மையான உணவு பண்டங்களாக உள்ளன.

**“முற்றா மஞ்சட் பசும் புறம் கடுப்பச்**
**சுற்றிய மிணர சூழ் கழி இறவின்**
**கணம் கொள் குப்பை உணங்கு திறன் நோக்கி”** (நற். 101: 1-3)

என்ற நற்றிணை வரிகளின் மூலம் முற்றாத மஞ்சள் கிழங்கினையும், இறால் மீன்களையும் உலர்த்தி உணவாக உண்டனர் . என்பதனை அறியலாம் . மீனின் கொழுப்பினை எடுத்து நெய்யாக உருக்கி விளக்குகள் எரிப்பதற்காக பயன்பத்தினார்கள். இதனை,

**“கொழு மீன் கொள்ளை அழி, மணல் குவைஇ,**
**மீன் நெய் அட்டிக் கிளிஞ்சல் பொத்திய**
**சிறு தீ விளக்கில் துஞ்சும், நறுமலர்ப்”** (நற். 175: 2-4)

என்ற நற்றிணை வரிகளின் மூலம் அறியலாம்.

மீன்களை சுட்டு உண்ணும் பழக்கம் இம்மக்களிடம் காணும் முறையாகும்.

**“கொழுமீன் சுடுபுகை மறுகினுள் மயங்கி”** (நற் : 311 :6)

என்பன போன்ற வரிகள் எடுத்துரைக்கின்றன.

**பண்டமாற்று முறைகள்**

உப்புக்காக எல்லாத் திணைமக்களும் நெய்தலைச் சார்ந்திருந்தன . உப்பின் காரணமாக நெய்தல் பண்டமாற்றில் தனித்த ஆதிக்கம்

பெற்றிருந்தது. உப்பு பிற திணைகளுக்கும் தேவைப்படும் போது அதனை எடுத்துச் செல்வதற்காக உமணர் என்ற தனித்த ஒரு குழு அமைத்து குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய திணைகளுக்கு எடுத்துச் சென்று அந்த நிலங்களில் விளைந்த விளைப்பொருட்களை பெற்று வந்தனர். என்பதனை,

**“உவர் விளை உப்பின் குன்று போல் குப்பை**
**மலை உய்த்துப் பகரும், நிலையா வாழ்க்கை”(நற்: 138, 1-2)**

என்ற வரிகளின் மூலம் தெளிவாகின்றன.

பிற நிலங்களில் உள்ள பொருட்கள் நெய்தல் நிலத்தில் வருவதனால் நெய்தலில் தன் தேவையை விட மிகுதியான உணவுப் பண்டங்களை பெறமுடிந்தது. எல்லா நிலங்களிலும் உள்ள மிகை உணவுப் பண்டங்கள் நெய்தலில் குவிந்ததால் அங்கிருந்து வணிகம் தோன்றலாயிற்று. நெய்தல் நிலப்பகுதியில் ஏற்றுமதி இறக்குமதிகள் நடைபெற்றிருக்கின்றன. இதனை,

**“விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்” (மதுரை : 321)**

என்ற மதுரைக்காஞ்சி வரிகள் தெளிவுப்படுத்துகின்றன.

**நம்பிக்கைள்**

இயற்கையாக நிகழும் நிகழ்வுகளை வாழ்வியலயோடு இணைத்து பார்க்கும் திறன் மிக்கவர்களாக இருந்தனர் . முழுநிலா தோன்றும்

காலங்களில் கடல் பெங்கி எழும் என நம்பிக்கைக் கொண்டிருந்தனர் . முழுநிலாக் காலங்களில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடத்துவதால் நன்மைகளே நடக்கும் என நம்பிக்கைக் கொண்டிருந்தனர்.

**“வருவை ஆயினோ நன்றே - பெருங்கடல்**
**இரவுத் தலை மண்டிலம் பெயர்ந்தென, உரவுத்திரை**
**ஏறிவன போல வரூஉம்”** **(நற்: 375 6-8)**

என்னும் நற்றிணை வரிகள் எடுத்துரைக்கின்றன.

மகளிர் தாம் விரும்பிய கணவனைப் பெறுவதற்காக நோன்பு மேற்கொண்டிருந்தனர். ஆண்களும் மணப்பதற்குரிய கொடைப் பொருட்களை கொண்டு பெண்வீட்டில் கொடுத்து பெண்களை திருமணம் செய்து கொண்டனர் என்பதனை,

**“கடல் அம் காக்கைச் செவ்வாய்ச் சேவல்**
**படிவ மகளிர் கொடி கெய்து அழித்த”** **(நற்: 272, 1-2)**

**“கழனி ஒழிந்த கொடு வாய்ப் பெடைக்கு**
**முடமுதிர் நாரைகடல் மீன் ஒய்யும்”** **(நற்: 263, 6-7)**

என்னும் நற்றிணைப் பாடல் வரிகளில் பதிவு செய்யப்பட்டு;ள்ளன.

**பாலைத்திணை இனக்குழு அமைவு**

பாலைநிலம் குறித்து பல்வேறு கருத்து வேறுபாடுகள் உள்ளன . குறிஞ்சியும், முல்லையும் முறைமையில் திரிந்து பாலை உருவானதாகக் குறிப்பிடும் சில அறிஞர்கள் பாலை என்பது தற்காலிகான நிலை என்ற முடிவுக்கு வருகின்றனர் . கற்கள், பரல் கற்கள், பதுக்கைகள் நிறைந்த இடம் , வெம்மையான சுரம் என்பன போன்ற வருணணைகள் சங்க இலக்கியங்களில் இடம்பெறுவதால் இந்நிலம் வளம் குன்றியப் பகுதி என்பது அறியப்படுகின்றது . மழை இன்மை காரணமாகக் குடிப்பெயர்வு நிகழ்ந்துள்ளது . மக்கள் வளம் இல்லாதப் பகுதியிலிருந்து குடி பெயர்ந்ததால் பாழ்பட்ட இடமாக பாலை கருதப்படுகிறது.

இதனை,

**“இடி உமிழ் வானம் நீங்கி, யாங்கணும்**
**குடி பதிப்பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்”** **(அகம்: 77, 4-6)**

என்ற அகநானூற்று வரிகள் மூலம் அறியலாம்.

**பாலை நிலை**

பாலை நிலத்திற்குரியவர்களாக எயினர் , வேட்டுவர், மறவர், ஆறலைக் கள்வர்கள் குறிக்கப்படுகின்றனர் . இவர்களது வாழிடங்கள் குறும்பு, பறந்தலை, சீறூர் என அழைக்கப்பட்டன . வேட்டையாடுதல்

முறை இருந்திருக்கின்றன . உடும்பு, முயல், காட்டுப்பன்றி போன்ற விலங்குகள் வேட்டையாடப்பட்டுள்ளன. பாலைத் திணையில் உணவுப் பற்றாக்குறை இருந்திருக்கின்றது. தன்னுடைய தேவைகளை நிறைவுச் செய்வதற்காக ஆநிரைக் கவர்தல் , வழிப்பறி போன்ற செயல்களை செய்தனர்.

**முடிவுரை**

இனக்குழு மக்கள் கூட்டு வாழ்க்கையை நடத்தினர் . கிடைத்த உணவுப் பொருட்களைப் பகுத்து உண்டனர் . இனக்குழுத் தலைவன் அக்குழு மக்களைப் போலச் சாதாரண நிலையிலேயே வாழந்தான் . இனக்குழு வாழ்க்கை முறையில் மந்திரம் , சடங்கு முறைகளும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன . காலப்போக்கில் தொழில் நுட்பங்களை அறியும் திறமை பெற்றதால் மந்திரங்கள் மறைந்தன.

**பார்வை நூல்கள்**

1. நற்றிணை,முனைவர். கு.வெ. பாலசுப்ரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை - 600 098, முதல் பதிப்பு, ஏப்ரல் - 2004.

2. ஐங்குறுநூறு, அ. தட்சிணாமூர்த்தி,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் ,அம்பத்தூர், சென்னை - 600 098, முதல் பதிப்பு, ஏப்ரல் - 2004.
3. இலக்கிய இனவரைவியல் ,ஞா. ஸ்டீபன்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098, முதல் பதிப்பு, அக்டோபர் - 2017.
4. சங்ககாலச் சமுதாயம் ,கா. சுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை - 600 098, முதல் பதிப்பு, மே, 1982.
5. அகநானூறு,முனைவர் இரா. செயபால்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் ,அம்பத்தூர், சென்னை - 600 098, முதல் பதிப்பு, ஏப்ரல் - 2004.
6. பத்துப்பாட்டு,வி. நாகராஜன்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் ,அம்பத்தூர், சென்னை - 600 098, முதல் பதிப்பு, ஏப்ரல் - 2004.
7. குறுந்தொகை,வி. நாகராஜன்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் ,அம்பத்தூர், சென்னை - 600 098, முதல் பதிப்பு, ஏப்ரல் - 2004.
8. புறநானூறு கு .வெ. பாலசுப்பிரமணியன்,அ. விசுவநாதன், வி. நாகராசன், இரா. ஆரோக்கியசாமி,வெ. சத்தியநாராயணன்,நியூ

செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை - 600 098,

முதல் பதிப்பு, ஏப்ரல் - 2004.